**MCOP.33 to 35, 78 and 81/2025**

**நாள்.21.07.2026.**

**ம.சா.1 – பாண்டிக்செல்வி,க/பெ.ராஜேஸ்**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து இராமநாதபுரம் – இராமேஸ்வரம்செல்லும் தேசிய நெடுஞ்சாலை அருகே பிரப்பன்வலசை கிராமத்திற்கு செல்லும் ரோட்டின் அருகே ராஜ்ஹோட்டல் எதிர்புறம் நடந்தது என்றால் சரிதான். விபத்தின் போது நான் பயணம் செய்த காரில் என் கணவர், அப்பா செந்தில்மனோகரன், அம்மா அங்காளேஸ்வரி, என் மகள்கள் ஹர்சிதாராணி, பிரனவிகா ராணி மற்றும் என்கைக்குழந்தை ஹரிஹர்சன் ஆகியோர்கள் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சென்ற வாகனத்தை சவரிபிரிட்டோ என்பவர் ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். நாங்கள் பிரப்பன்வலசை செல்லும் ரோட்டிற்கு அருகே செல்லும்போது பின்னால் வந்த அரசுப்பேருந்து நாங்கள் சென்ற காரை முந்திச் சென்றது என்றால் தெரியாது. அப்போது நான் காரில் தூங்கிக்கொண்டிருந்தேன் என்றால் ஆமாம். அதனால் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியவாறு விபத்து நடந்ததா என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நாங்கள் சென்ற காருக்கு முன்னால் பேருந்து நின்று கொண்டிருந்தது. எங்கள் காரை முந்திச் சென்ற அரசுப் பேருந்து எவ்வித போக்குவரத்து சமிக்கைகளையும் காட்டாமல் பேருந்தை நடுரோட்டில் நிறுத்திவிட்டார் என்றால் எங்கள் கார் முன்னால் நின்று கொண்டிருந்த பேருந்தின் பின்புறம் மோதிவிட்டது, உடனே நான் முழித்துவிட்டேன். எங்கள் காரை ஓட்டிச் சென்ற ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்று போதுமான வாகனங்களுக்கு இடையேயான இடைவெளியை கடைபிடிக்காமல் நின்று கொண்டிருந்த பேருந்தின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரிதான். விபத்திற்கு 3ம் எதிர்மனுதார் பேருந்தை ஓட்டிவந்த ஓட்டுனரின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு, சாலைவிதிகளை கடைபிடிக்காமல் வந்தது, திடீரென்று ரோட்டின் நடுவே பேருந்தை நிறுத்தி விபத்து ஏற்படுவதற்கு காரணமாக இருந்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் வாகனத்தை 2ம் எதிர்மனுதாரிடம் செய்துள்ள காப்பீடு விதிமுறைகளை மீறி, அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையான டிரைவருடன் ஐந்து என்ற விதிமுறையை மீறி அதிகளவு

பயணிகளை ஏற்றிக்கொண்டு வாகனத்தை இயக்கியுள்ளதால் 2ம் எதிர்மனுதார் காப்பீடு நிறுவனம் எந்தவித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணமான 3ம்எதிர்மனுதாரர் அரசு பேருந்து என்பதால் 1ம் எதிர்மனுதாரர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரான அரசு பேருந்தான TN 63 N 1778 ஆனது மதுரையிலிருந்து இராமநாதபுரம் வரை செல்லும் வழித்தடத்தில் மட்டும் இயங்க வேண்டும் என விபத்து தேதியில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, ஆனால் அதை மீறி இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் வரை பேருந்தை இயக்கி விபத்திற்கு காரணமாக இருந்துள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.3 ஆவணத்தின் படி 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் ஓட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீட்டு சான்றிதழும்சமர்ப்பிக்கப்படவில்லை என ம.சா.ஆ.3ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.13 முதல் 17 வரையிலான ஆவணங்கள் நகல்கள் என்பதால் அவை ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் அனைத்தும் கூடுதல் இழப்பீடு பெறவேண்டி உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுவில் கண்ட எனது கணவரின் தகப்பனார் இராமகிருஷ்ணன் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகள் உரிய தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், எனவே இம்மனு அவசிய கட்சிக்காரர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.15 முதல் 17 ஆவணங்களின் உண்மைத்தன்மை குறித்து அதனை வழங்கிய வருமானவரித்துறையினரை விசாரித்தால் தான் தெரியவரும் என்பதால் அந்த ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் திருமணம் முடித்து என் கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்ததால் நான் என் பெற்றோரை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல, அவ்வப்போது எனக்கு உதவி செய்து வருவார்கள். என் அப்பா உதவி செய்து வருவார் என இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு இனங்களில் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. விபத்தானது 3ம் எதிர்மனுதாரரின் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையினாலும் ஏற்பட்டதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.  அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

3**ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்துள்ள மனுவிலோ, எனது நிரூபண வாக்குமூலத்திலோ 3ம்எதிர்மனுதாரருக்கு சொந்தமாக பேருந்து ஓட்டுனரின் கவனக்குறைவு காரணமென்றோ அதனால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றோ கேட்கவில்லை என்றால் சரிதான்.  நாங்கள் பயணம் செய்த ஓட்டுனர் மீது தான் முதல் தகவல் அறிக்கையும், இறுதி அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் மீது எந்த இழப்பீடும் கோரவில்லை என்பதால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.